நான்; மக்களுக்காகவே நான்" என்று ஏழைகளுக்காக வாழ்ந்து மறைந்த, கல்விக்கு இதயத்தையே கொடுத்த டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் துயில்கொள்ளும் திசை நோக்கி வணங்குகிறேன். தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர், காவேரிக் காப்பாளன், விவசாயிகளின் விடிவெள்ளி அவர்கள் கூட்டுறவு வங்கிகளில் பெற்ற விவசாயிகளின் அனைத்துப் பயிர்க் கடன்களும் தள்ளுபடி என்று அறிவித்திருக்கிறார்கள். கூட்டுறவு நிறுவனங்களில் 6 பவுன் வரையிலான நகைக் கடன் தள்ளுபடி, அதேபோன்று, இன்றைக்கு தமிழகத்தில் 2 இலட்சம் மகளிர் சுய உதவிக் குழுக்களில், 39 இலட்சம் பேர் இடம்பெற்றிருக்கிறார்கள். அந்த மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கிய கடன் தள்ளுபடி ஏழைகளின் வங்கிக் கடன்களையெல்லாம் தள்ளுபடி செய்து, அவர்களை வாழவைத்த தெய்வமாக விளங்கிக் கொண்டிருக்கின்றார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களை 'இதய தெய்வம்' என்று சொன்னோம்; புரட்சித் தலைவி அம்மா அவர்களை 'இதய தெய்வம்' என்று சொன்னோம். அந்த வரிசையில், இன்றைக்கு மூன்றாவது இதய தெய்வமாக விளங்கிக் கொண்டிருக்கின்ற எங்கள் 'இதய தெய்வம்' மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களை வணங்குகிறேன்.

அதேபோன்று, ஜல்லிக்கட்டு நாயகன், தென்பாண்டிச் சிங்கம், மனிதநேயப் பண்பாளர் அண்ணன் மாண்புமிகு துணை முதல்வர் அவர்களையும் வணங்குகிறேன். இந்தச் சபையின் மூத்த உறுப்பினரும், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சரும், எங்கள் அரசியல் வழிகாட்டியுமான அண்ணன் கே.ஏ.எஸ். அவர்களையும் வணங்குகிறேன். எங்களது மாவட்டத்தினுடைய அமைச்சர், மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அண்ணன் திரு. கே.சி. கருப்பணன் அவர்களையும் வணங்குகிறேன். எங்களது மாவட்டக் கழகச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான அண்ணன் கே.வி.ஆர். அவர்களையும் வணங்குகிறேன். சட்டப் பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்களையும், அரசு தலைமைக் கொறடா அவர்களையும், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அண்ணன் அவர்களையும் வணங்குகிறேன்.

ஈரோடு கிழக்குத் தொகுதியில் 100 கோடி ரூபாய் செலவில் மின் புதைவடக் கம்பிகள் அமைக்கும் பணிகளில் 40 சதவிகிதப்

2021 பிப்ரவரி 27]

பணிகள் முடிவடைந்துள்ளன. குறுகலான சாலைகளில் எல்லாம் இருபுறமும் மின்கம்பங்கள் அகற்றப்பட்டு, தற்போது புதுப்பொலிவோடு காணப்படுகின்றன. மீதம் உள்ள 60 சதவிகித புதைவடக் கம்பி அமைக்கும் பணிகளையும் நிதி ஒதுக்கி முடித்துக்கொடுத்தால் மிகச் சிறப்பாக இருக்கும். ஈரோட்டில் இருக்கின்ற சந்து பொந்துகளில் உள்ள சாலைகளில் எல்லாம், புதைவடக் கம்பிகள் புதைக்கப்பட்டு, விரிவடைந்த சாலைகளாகக் காணப்படும். எனவே, அப்படிப்பட்ட நிலையினை உருவாக்கித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நல்ல பதிலைத் தர வேண்டும் என்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமருகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சட்டமன்றத்தில் கேட்ட அத்தனை கோரிக்கைகளும் துறைக்கு அனுப்பப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 43, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகரன், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

43—

சமுதாயக் கூடம்

***50442—திரு. துரை. சந்திரசேகரன்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவையாறு தொகுதி, திருவையாறு ஊராட்சி ஒன்றியம், பெரமூர் ஊராட்சி, பெரமூரில் சமுதாயக் கூடம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10–15

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பெருமை வாய்ந்த சட்டமன்றத்திலே 3 முறை சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்ற வாய்ப்பு கொடுத்து, வெற்றி பெறச் செய்த, மறைந்தும் மறையாமல் மக்கள் மனதில் தெய்வமாக இருக்கக்கூடிய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை இந்த நேரத்தில் வணங்குகிறேன். அதேபோல, இந்த அரசு 3 மாதங்களோ, 6 மாதங்களோ இருக்குமென்று எதிர்க்கட்சிகளும், மற்றவர்களும் நினைத்தபோது, அற்புதமாக அம்மாவினுடைய அரசைக் கட்டிக்காத்து, மக்களுக்குத் தேவையான அத்தனை திட்டங்களையும் தந்து, கொள்கை அளவில் எதிர்க்கட்சிகளுக்கு சிம்ம சொப்பனமாகவும், இரும்பு மனிதராகவும் திகழ்ந்து, திட்டங்கள் தருவதில் மக்களுக்கு இனிக்கின்ற கரும்பு மனிதராக இருக்கக்கூடிய அருமை அண்ணன், அனைத்துத் தரப்பு மக்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரே முதலமைச்சர் அண்ணன் மாண்புமிகு எடப்பாடியார் அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன். அனைத்துத் திட்டங்களும் நிறைவேற மாண்புமிகு முதலமைச்சருக்கு உறுதுணையாக இருக்கக்கூடிய ஜல்லிக்கட்டு நாயகன், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர், அருமை அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களையும் வணங்குகிறேன். இந்தச் சட்டமன்றத்தைச் சிறப்பான முறையில் நடத்தி, மற்றவர்களுக்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்ற மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அண்ணன் அவர்களையும் வணங்குகிறேன். இங்கிருக்கக்கூடிய அனைத்து மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் வாழ்த்துக்களையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு ஊராட்சி ஒன்றியம், பெரமூர் ஊராட்சி, பெரமூரில் சமுதாயக் கூடம் அமைப்பது பற்றிய கோரிக்கை துறைக்கு அனுப்பி வைக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2021 பிப்ரவரி 27]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகரன், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.எஸ். இன்பதுரை அவர்கள்.*

திரு. ஐ.எஸ். இன்பதுரை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாமன்னர் அசோகர் மரங்கள் நட்டார்; சாலைகள் அமைத்தார்; குளங்களை வெட்டினார் என்று வரலாற்றுப் பாடங்களில் படித்திருக்கிறோம். ஆனால், குடிமராமத்துத் திட்டம் தந்து, நல்ல பல சாலைகளைத் தந்து, நீர்ப்பாசனத் திட்டங்களைத் தந்து, வரலாறு படைத்துக்கொண்டிருக்கின்ற வாழும் அசோகராக இருக்கிற நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரை தமிழகம் இன்றைக்கு நேரில் கண்டுகொண்டிருக்கிறது. அசோகரை வரலாற்றுப் புத்தகத்தில் படித்தோம்; ஆனால், இவர் இன்றைக்கு வரலாறு படைத்துக்கொண்டிருக்கிறவர். அப்படி சாதனைகளைச் செய்வதில் வேட்டி கட்டிய புரட்சித் தலைவியாக இருக்கிற, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன். அவருக்குத் துணையாக, பக்கபலமாக, பாதுகாப்பாக இருக்கிற நம்முடைய மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.*

நான் கேட்கும் கேள்வி, மூலக் கேள்விக்கு சம்பந்தமில்லாத கேள்வி என்று சொல்லி, இதை விட்டுவிடக் கூடாது என்று மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களை முதலில் கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய ராதாபுரம் சட்டமன்றத் தொகுதியில் இருக்கிற லெவிஞ்சிபுரம் பஞ்சாயத்து, மிகப் பெரிய பஞ்சாயத்து ஆகும். அந்தப் பஞ்சாயத்தைப் பிரிக்க வேண்டுமென்ற கோரிக்கை வெகுகாலமாக இருந்து வருகிறது. அதுமட்டுமல்லாமல், என்னுடைய ராதாபுரம் தொகுதியில், இருக்கிற திசையன்விளை மற்றும் வள்ளியூர் பேரூராட்சிகளை நகராட்சிகளாகத் தரம் உயர்த்தித் தர வேண்டுமென்ற கோரிக்கையும் இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்பொழுது எழுந்து இதைத் துறைக்கு அனுப்பி வைக்கிறேன் என்று சொல்வார்; நம்பிக்கைதான் வாழ்க்கை. இந்த அமைச்சரவைதான் தமிழகத்தில் மீண்டும் அமையும். (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய மாண்புமிகு முதல்வர் எடப்பாடியார் அவர்கள் தலைமையில்தான் அரசாங்கம் அமையும். (மேசையைத் தட்டும் ஒலி) செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்தான் ஆட்சி அமைக்கும்

என்று, நான் சொல்லவில்லை; தமிழகத்தில் இருக்கிற ஒவ்வொரு இதயமும் சொல்லிக்கொண்டிருக்கிறது. நம் இதயங்களில் தெய்வமாக வாழ்ந்து கொண்டிருக்கக்கூடிய புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் நம்மை வழிநடத்திக் கொண்டிருக்கிறார்கள். எனவே, இந்த அரசுதான் மீண்டும் அமையப் போகிறது. எனவே, நீங்கள் துறைக்கு இப்போதே இதை அனுப்பி வைத்திட வேண்டும்; வருகிற மே மாதம் நாம் ஆட்சி அமைத்ததும், முதல் கோரிக்கையாக என்னுடைய இந்தக் கோரிக்கையை நிறைவேற்றித் தரவேண்டுமென்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நன்றாகப் பேசக்கூடியவர். அதுமட்டுமல்ல; தொகுதி மக்களுக்காக அன்போடு பல்வேறு திட்டங்களை நிறைவேற்றுவதற்கு முனைப்பாக இருப்பவர். ஆகவே, உறுப்பினரின் கோரிக்கை, விதிமுறைப்படி இன்றைக்குத் துறைக்கு அனுப்பி வைக்கப்படும். 2021 சட்டமன்றத் தேர்தலில் வெற்றிபெற்று மீண்டும் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் முதலமைச்சராக வருவது உறுதி. (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்ல; நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் எடப்பாடியார் அவர்கள் மட்டும்தான் எந்தவொரு திட்டத்தை அறிவித்தாலும், அதை நிறைவேற்றக்கூடியவர் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்வியை மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களும் கேட்டிருப்பார்கள் ஆகவே, மீண்டும் 2021–ல் மே மாதத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் முதலமைச்சராகப் பதவியேற்று கண்டிப்பாக இதனை நிறைவேற்ற வாய்ப்பு ஏற்படும். நிச்சயம் இந்தக் கோரிக்கை மட்டுமல்ல, மக்களுடைய அனைத்து கோரிக்கைகளும், 2021–ல் முதலமைச்சராக வரும்பொழுது, விதிமுறைகளுக்குட்பட்டு அப்பொழுது என்ன சூழ்நிலை இருக்குமோ, அதற்கேற்ப நிறைவேற்றக்கூடிய வாய்ப்பு இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, இப்பொழுது உறுப்பினரின் கேள்வி, துறைக்கு அனுப்பி வைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

2021 பிப்ரவரி 27]

முற்பகல் 10–20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. நி. சதன் பிரபாகர் அவர்கள்.*

திரு. நி. சதன் பிரபாகர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். எங்கள் குலதெய்வமாக இருக்கின்ற புரட்சித் தலைவி அம்மா அவர்கள், எங்களையெல்லாம் விட்டு நீங்கியபொழுது, நாங்களெல்லாம் திக்குத் தெரியாத காட்டில், நடுக்கடலில் தத்தளித்துக்கொண்டிருந்தோம். அப்போது, எங்களையெல்லாம் கரை சேர்க்கும் கலங்கரை விளக்கமாக, "இதோ, நாங்கள் இருக்கிறோம்; நீங்கள் கவலைப்படாதீர்கள்" என்று எங்களைக் கைதூக்கிவிட்ட எங்களது மாண்புமிகு தமிழக முதல்வர் அண்ணன் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழக துணை முதல்வர் அண்ணன் அவர்களுக்கும் எனது பணிவான வணக்கங்களை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.*

நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் நிறைவேற்றியுள்ள திட்டங்களையெல்லாம் சொல்லிக்கொண்டே போகலாம். எண்ணற்ற திட்டங்களை நிறைவேற்றி, sixer *மேல்* sixer *ஆக அடித்துக்கொண்டிருக்கின்ற ஒரே முதல்வர், நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதைச் சொல்ல வேண்டுமென்றால், இன்றைக்கு இந்த அவையின் நேரம் போதாது.* NEET *தேர்வில் தேர்ச்சி பெற்ற அரசுப் பள்ளி மாணவர்களுக்கு ஒதுக்கீடு 7.5 சதவீதமாகட்டும்; டெல்டா மாவட்டங்களைப் பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலங்களாக அறிவித்ததிலாகட்டும், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்களில் வாங்கிய விவசாயக் கடன்களையும், 6 பவுன் வரையிலான நகைக் கடன்களையும், சுய உதவிக் குழுக்களுக்கான கடன்களையும் தள்ளுபடி செய்ததிலாகட்டும், மக்களின் நெஞ்சங்களில் பால் வார்த்தது மட்டுமின்றி, குடிமராமத்துத் திட்டங்களையும் நிறைவேற்றி கரிகால் சோழனாக விளங்கிக் கொண்டிருக்கின்றார் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள்.*

எங்களுடைய தென்மாவட்டத்தின் வறட்சியான பகுதிகள் பாசன வசதி பெறுவதற்கு ஏதுவாக, சுமார் ரூ.14,000 கோடியிலான மிக முக்கியமான ஒரு திட்டமான காவேரி–குண்டாறு இணைப்புத்

திட்டத்தினை நிறைவேற்றித் தந்திருக்கின்ற மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியினை அவரது பொற்பாதங்களில் நான் சமர்ப்பித்துக் கொள்கின்றேன். அதுமட்டுமல்ல, 11 புதிய மருத்துவக் கல்லூரிகளைத் தொடங்கி வைத்து, புதிய மாவட்டங்களையும் தந்து, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நினைவிடம் கட்டியதோடு மட்டுமல்லாமல், அம்மாவின் பிறந்த நாள் அரசு விழாவாகக் கொண்டாடப்படும் என அறிவித்து, கடற்கரைச் சாலையில் அம்மாவிற்கு சிலை அமைத்து சிறப்பு சேர்த்துக்கொண்டிருக்கின்ற அண்ணன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நான் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். மரியாதைக்குரிய நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அண்ணன் அவர்கள் எல்லோருக்கும், எப்பொழுதும் கேட்டதையெல்லாம் கொடுக்கக்கூடியவர்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள பரமக்குடி நகராட்சி என்பது மிகப் பெரிய நகராட்சி. அந்த மாவட்டத்தில் நான்கு நகராட்சிகள் இருந்தாலும், இராமநாதபுரம் தலைமையிடமாக இருந்தாலும், அதைவிடப் பெரிய நகராட்சி பரமக்குடி நகராட்சி ஆகும். அந்த நகராட்சியில் சமுதாயக் கூடம் கட்டுவதற்கான சிறப்பான இடம் நகராட்சிப் பகுதிக்குள்ளேயே இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அண்ணன் அவர்கள் சொன்னதுபோல, நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 2021 சட்டமன்றத் தேர்தலில் வெற்றிபெற்று, மீண்டும் முதல்வராக வரும்பொழுது, மாண்புமிகு அமைச்சர் அண்ணன் அவர்களே ஊரக வளர்ச்சித் துறைக்கு மீண்டும் அமைச்சராக வருவார்கள்; எனது கோரிக்கையான பரமக்குடி நகராட்சியில் சமுதாயக் கூடத்தை நிச்சயமாக அமைத்துத் தருவார்கள் என்று சொல்லி அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்களே இதற்கான பதிலைச் சொல்லி ஒப்புக்கொண்டுவிட்டார்.

2021 பிப்ரவரி 27]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. பழனி அவர்கள்.*

திரு. கே. பழனி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழக நிறுவனத் தலைவர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களை வணங்குகிறேன். எங்களையெல்லாம் வளர்த்து ஆளாக்கிய இதய தெய்வம், கழகத்தின் காவல் தெய்வம், மாண்புமிகு அம்மா அவர்களையும் வணங்குகிறேன். நேற்றையதினம் சட்டமன்றத்தில் விதி 110–ன்கீழ் அறிவிக்கப்பட்ட திட்டங்களைப் பாராட்டி மக்கள் பட்டாசுகள் வெடித்து, இனிப்புகளைக் கொடுத்து கொண்டாடினார்கள். அதற்காக மக்களின் சார்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமின்றி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்த திட்டங்களைப் பார்க்கின்றபோது, 2021 சட்டமன்றத் தேர்தலில் மீண்டும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி பெறும்; இரண்டாவது முறையாக முதலமைச்சராகப் பதவியேற்கவிருக்கும் தமிழகத்தின் நிரந்தர முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அவருடன் இணைந்து பணியாற்றிவரும் மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களையும் வணங்குகிறேன். மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அண்ணன் அவர்களையும் வணங்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் தொகுதியிலுள்ள குன்றத்தூர், மாங்காடு ஆகிய இரண்டு பேரூராட்சிகளும் சென்னையை ஒட்டியுள்ள பேரூராட்சிகளாக இருக்கின்றன. எனவே, அங்கு பாதாள சாக்கடைத் திட்டத்தைக் கொண்டு வரும்படி ஏற்கெனவே நான் இங்கு பதிவு செய்திருக்கின்றேன். அந்த இரண்டு பேரூராட்சிகளிலும் பாதாள சாக்கடைத் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டுமென மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*